# பாட்டாளி சிந்தனை

Volume 34 No 4

December 2023

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5

## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்
# லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டு




உலகின் எல்லா புரட்சிகளாலும், இருபதாம் நூற்றாண்டின் அனைத்து மூன்று இரஷ்யப் புரட்சிகளாலும் உறுதி செய்யப்பட்ட புரட்சியின் அடிப்படை விதி பின்வருமாறு: சுரண்டப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் பழைய முறையில் வாழ இயலாது என்பதையும் மாற்றம் வேண்டும் என்பதையும் புரிந்துகொள்வது மட்டுமே புரட்சிக்குப் போதுமானதல்ல; சுரண்டுபவர்களும்கூட பழைய முறையில் வாழ்ந்து பழைய முறையில் ஆளுவது இனியும் முடியாதிருப்பது அவசியம். எப்பொழுது "கீழ்தட்டு வர்க்கம்" பழைய முறையில் வாழ விரும்பாமலும், "மேல்தட்டு வர்க்கம்" பழைய முறையில் ஆள முடியாமலும் போகின்றதோ, அப்பொழுது மட்டுமே புரட்சி வெற்றி பெறும் ■

**லெனின்**

*(இடதுசாரி கம்யூனிசம் ஓர் இளம்பருவக் கோளாறு)*

### பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டு தருணத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அறைகூவல்!

அன்பார்ந்த தோழர்களே,

மாபெரும் மார்க்சிய தத்துவமேதையும் சிந்தனையாளரும், உலகின் முதல் சோசலிச புரட்சியை ரஷ்யாவில் நடத்திய சிற்பியும், உலக பாட்டாளி வர்க்கத்தின் தலைவரும் ஆசானுமான மாபெரும் தலைவர் லெனின் அவர்கள் 21 ஜனவரி 1924இல் மறைந்தார் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த மாபெரும் சிந்தனையாளரின் நினைவு நூற்றாண்டு ஜனவரி 21, 2024 உடன் நிறைவடைகிறது. இதனை உரிய முறையில் 7 நவம்பர் 2023 முதல் 21 ஜனவரி 2024 வரை அனுஷ்டிப்பதற்கு நமது கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

லெனின் அவர்கள், இரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சிக்குள் மென்ஸ்விக்குகளுக்கு எதிராகப் போராடி வரலாற்றின் முதல் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினார். அதன் மூலம் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவதற்கான செயல்முறையை அகில உலகத்திற்கும் வழங்கினார் என்பதை இத்தருணத்தில் நாம் நினைவுகூற வேண்டும்.

"இரண்டாவது அகிலம்" என்ற சர்வதேச கம்யூனிஸ்டுகளின் கூட்டமைப்பு மார்க்சிசத்திற்கு முரணான திருத்தல்வாதத்திற்கு சென்றபோது லெனின் அதற்கு எதிராக விடாப்பிடியான சித்தாந்த போராட்டத்தை நடத்தி அதன் மூலம் மார்க்சிச தத்துவத்தின் புரட்சிகர மையக் கருவை பாதுகாத்தார்.

வரலாற்றில் முதல் பாட்டாளி வர்க்க புரட்சியை சாத்திய மாக்கியதும் சோவியத் யூனியன் சோசலிச குடியரசுக்கு (USSR) அடித்தளமிட்டவரும் லெனின்தான் ஆவார்.

"தேசங்களின் சுய நிர்ணய உரிமை" என்ற தனது நூலின் வாயிலாக காலனியாதிக்க நாடு களில் விடுதலைக்கான கருத்தியல் அடிப்படை களை வழங்கியதும் காலனி நாடுகளின் விடுதலைப் போராட்டங் களுக்கு உதவியதும் லெனின் அவர்கள் தான்.

இரஷ்யாவில் பூர்ஷ்வா சித்தாந்தங்களுக்கு எதிராகவும் மென்ஸ் விக்குகளுக்கு எதிரா கவும், "இரண்டாவது அகிலத்தில்" திருத்தல் வாதிகளுக்கு எதிராகவும் விடாப்பிடியான போராட்டத்தை நடத்திக் கொண்டே மார்க்சிசத்தை சித்தாந்த ரீதியாக, தத்துவார்த்த ரீதியாக, அரசியல் ரீதியாக, அமைப்பு ரீதியாக வளர்த்தெடுத்ததும், இதன் போக்கில் மார்க்சிய கருவூலத்திற்கு அடிப்படைப் பங்களிப்புகளை வழங்கியதும் லெனின் அவர்கள் தான்.

மார்க்ஸ் காலத்திற்குப் பிறகு முதலாளித் துவத்தின் புதிய உச்சக் கட்டம் பற்றிய, அதாவது ஏகாதிபத்தியம் பற்றிய மார்க்சிய பகுப்பாய்வை வழங்கியதும் லெனின் அவர்கள் தான். எனவே தான் "லெனினிசம் என்பது ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சி காலகட்டத்தின் மார்க்சிசம்" என்று மாபெரும் தலைவர் ஸ்டாலின் கூறினார்.

தோழர் லெனின் அவர்களின் அடிப்படைப் பாடங்கள் மற்றும் பகுப்பாய்வுகளின் அடிப் படையில் அவரது மதிப்பிற்குரிய சீடர்களான தோழர்கள் ஸ்டாலின், மாசேதுங், சிப்தாஸ் கோஷ் ஆகியோர் அவரவர் காலத்திற்கு ஏற்றவாறு புதிதாக உருவான பிரச்சினைகளை எதிர் கொள்ளும் விதத்தில் மார்க்சிசம் லெனினிசத்தை எப்படி எந்த அளவிற்கு வளர்த்தெடுத்தனர் என்பதையும் நாம் இந்த தருணத்தில் நினைவுகூற வேண்டும். லெனினை நினைவு கூறுதல் அவருக்கு மரியாதை செய்தல் என்றால் மாபெரும் தலைவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங், சிப்தாஸ் கோஷ் ஆகியோரின் உரிய மாணாக்கர்களாக நாம் நம்மை வார்த்தெடுத்துக் கொண்டு, பாட்டாளிவர்க்க சர்வதேசியம், பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற அவரது நோக்கத்தை முன்னெடுத்துச் செல்கிறோம் என்று பொருளாகும்.

அன்பார்ந்த தோழர்களே, உலக சோசலிச அமைப்பின் அற்புதமான முன்னேற்றம், சக்தி வாய்ந்த சர்வதேச கம்யூனிச இயக்கம், வலுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்கள் ஆகியவை ஒரு காலத்தில் ஏகாதிபத்தியத்திற்கும்

தொடர்ச்சி 2ம் பக்கம்

# மிக்ஜம் புயல் வெள்ள நடவடிக்கை குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

*மிக்ஜம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகளை எடுக்கக்கோரி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி 07.12.2023 அன்று வெளியிட்ட அறிக்கை:*

புயல் வருவது மற்றும் அதன் சீற்றம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் ஒரு வாரத்திற்கு முன்பே எச்சரிக்கை விடுத்த பின்பும் மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் அனைத்திலும் அரசு இயந்திரம் முழுமையான தோல்வி அடைந்து விட்டதை வெள்ளப் பாதிப்புகள் அம்பலப்படுத்தி விட்டன. மழைக்கு முன் தகுந்த முன்னேற்பாடுகள் செய்வதற்கு பதிலாக புயல் சென்னையை விட்டு விலகிய பின்பு ஆமை வேகத்தில் நிவாரண நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு மூன்று நாட்கள் கடந்தும் பல பகுதிகளில் சாக்கடை நீர் கலந்த மழைநீர் வடியாமலும் குடிநீர், உணவு போன்ற அடிப்படைத் தேவை எதுவும் இல்லாமலும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாகனங்கள் என உடமைகளை இழந்தும் உள்ளனர்.

இச்சூழ்நிலையில், இப்பாதிப்பை பேரிடராகக் கருதி, அதன் அடிப்படையில் தமிழக அரசாங்கம் அனைத்து வித நிவாரண நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். பாதிப்பை சரியாக மதிப்பீடு செய்து உரிய இழப்பீடை வழங்க வேண்டும். அதுவரை, உடனடியாக பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் அத்தியாவசியத் தேவைகளான குடிநீர் மற்றும் உணவுப் பொருட்களை வழங்கிட வேண்டும். தங்கும் முகாம்களை நூற்றுக் கணக்கில் அமைக்க வேண்டும். மேலும், உடனடித் தேவைக்கு குடும்பத்திற்கு ரூ15000/ வழங்கிட வேண்டும். இவ்வெள்ளத்தில் உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கு தகுந்த இழப்பீடு வழங்கிட வேண்டும். நோய் பரவாமல் தடுக்க அனைத்து வித சுகாதார நடவடிக்கைகளையும் துரிதமாக எடுக்க வேண்டும். இவ்வாறு தனது அறிக்கையில் ஆ ரெங்கசாமி வலியுறுத்தியுள்ளார் ■

# லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டு . . .

*1ம் பக்கத் தொடர்ச்சி*

முதலாளித்துவத்திற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்தன. ஆனால் இரஷ்யா, சீனா, கிழக்கு ஐரோப்பா ஆகிய சோசலிச நாடுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலாளிகளால் நடத்தப்பட்ட பாட்டாளிவர்க்கத்திற்கு எதிரான, எதிர்ப்புரட்சியின் காரணமாக சோசலிசம் வேதனைக்குரிய வகையில் வீழ்ந்தது. சோசலிச நாடுகளாக இருந்த இவை எல்லாம் இன்று இல்லை. இப்படிப்பட்ட வேதனையான நேரத்தில் லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டை நாம் அனுசரிக்கிறோம் என்பதை வேதனையோடு பார்க்கிறோம்.

அதேசமயம், லெனின் அவர்கள் "ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் சாகும் தருவாய்" என்று முன்கூட்டியே கூறியதற்கு இணங்க இன்று உலக ஏகாதிபத்திய முதலாளித்துவம் தொடர்ந்து அதிகரித்துவரும் நெருக்கடியால் திக்கித் திண்டாடி, மூச்சு திணறி இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். சொல்லப் போனால், மக்களின் வாங்கும் சக்தி தொடர்ந்து நசுக்கப்பட்டு அதனால் சந்தை சுருங்குவதால் உலக முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பு முடிவே இல்லாத மந்தநிலையில் சிக்கித் தவிக்கிறது, இதனை முதலாளிகள் "பொருளாதாரம் மெதுவாக செல்கிறது" என்று கூறிக் கொள்கின்றனர். எப்படியாவது முதலாளித்துவம் பிழைத்திருக்க வேண்டும் என்பதற்காக, பன்னாட்டு நிறுவனங்களும் ஏகபோகங்களும் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளை மூடி வருகின்றனர், இலட்சக்கணக்கான தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்கின்றனர், நிரந்தர வேலைகளை தற்காலிக ஒப்பந்த பணியாளர்களாக குறைந்த ஊதியத்தில் பணியமர்த்துகின்றனர், அயல் பணி ஒப்படைப்பு மூலம் வேலை, பிணை தொழிலாளர்ளை நியமித்தல் போன்ற கடைசி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதோடு, மக்களின் வாங்கும் சக்தி குறைந்ததால் சந்தை நெருக்கடியைச் சமாளிக்க செயற்கை சந்தையை உருவாக்குவதற்காக, மாபெரும் லெனின் அவர்கள் சுட்டிக் காட்டியது போல பொருளாதாரத்தை மேலும் மேலும் இராணுவ மையப்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயுத சந்தையை நீட்டித்து விரிவாக்கம் செய்வதற்காக அவர்களுக்கு போர் பதற்ற நிலையை உருவாக்குவதும் பிராந்தியப் போர்களை தூண்டுவதும் அவசியமாக இருக்கிறது. தற்போது உக்ரைனில் என்ன நடக்கிறது? உக்ரைன் மீது ஏகாதிபத்திய இரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது அதற்கு ஏகாதிபத்திய சீனா மறைமுகமாக ஆதரவு தெரிவித்து வருகிறது, இந்நாடுகள் எதிர்ப்புரட்சியின் மூலம் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளாக மாறிவிட்டன என்பதை முன்பே குறிப்பிட்டோம்.

மற்றொருபுறம் அமெரிக்க ஏகாதிபத்தியம் இரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பாவில் உள்ள நேட்டோ நாடுகளின் கூட்டணியோடு சேர்ந்து உக்ரைன் போரில் ஈடுபட்டு வருகிறது.

ஆக, இது அமெரிக்கத் தலைமையிலான நேட்டோவாலும் இரஷ்யத்தலைமையாலும் அதாவது இரு முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களாலும் உருவாக்கப்பட்ட போராகும்.

மேலும், அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் அதன் கூட்டாளிகளின் ஆதரவோடு யூத வெறி இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைத் தொடுத்து வருகிறது இதனால் குழந்தைகள், பெண்கள், வயதான வர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பொது மக்கள் தாக்கப்பட்டு வருகின்றனர், நூற்றுக்கணக்கான கிராமங்கள், நகரங்கள், குடியிருப்புக்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

"ஏகாதிபத்தியங்கள் போரை உருவாக்குகின்றன" என்ற லெனின் அவர்களின் கூற்றை இப் போர்கள் மீண்டும் நிரூபிக்கின்றன.

பல்வேறு நாடுகளில் மக்கள் போராட்டங்களை பாசிச ஆட்சியாளர்கள் நசுக்க நசுக்க, போராட்டங்கள் மேலும் மேலும் உக்கிரமடைகின்றன. தங்களது வாழ்க்கையை சீரழிக்கும் விதமாக பெருகி வரும் பிரச்சினைகளை இன்னமும் பொறுத்துக் கொள்வதற்கு மக்கள் தயாராக இல்லை. அவர்கள் மாற்றத்தை விரும்புகின்றனர் ஆனால் அந்த மாற்றம் எப்படி வரும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே, யதார்த்தத்தில், புரட்சிக்கான புறவயச் சூழல் உருவாகிவிட்டது, ஆனால் அகவயச் சூழல் இன்னும் பூரணமாகவில்லை.

அதற்கு, பல்வேறு நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சிகளை எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக வளர்த்தெடுக்க வேண்டியது இத்தருணத்தில் தலையாய தேவையாகும். மார்க்சிசம் லெனினிசம், அதனைத் தொடர்ந்து ஸ்டாலின், மாசேதுங், ஆகியோரின் பங்களிப்புகளையும், குறிப்பாக இன்றைய காலகட்டத்திற்கான தோழர் சிப்தாஸ் கோஷ் வளர்த்தெடுத்த கருத்துக்களையும் ஆழ்ந்து படித்து கைவரப் பெறுவதும் இத்தருணத்தின் தலையாய தேவையாகும். நமது மாபெரும் தலைவரும் ஆசானுமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் கற்பித்தபடி தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் நமது புரட்சிகர பாத்திரத்தை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக மேலும் அர்ப்பணிப்புடன், ஒழுக்க நெறியுடன், வெல்லற்கரிய உத்வேகத்துடன் சித்தாந்த ரீதியாகவும், அமைப்புரீதியாகவும், அறநெறி ஒழுக்க ரீதியாகவும் நம்மை நாமே வளர்த்துக் கொள்ளவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதை நாம் இத்தருணத்தில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பின்வரும் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு உரிய முக்கியத்துவம் தர வேண்டும் என்று அனைத்து மாநில கமிட்டிகளையும் நமது கட்சியின் மத்திய கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

- மாபெரும் தலைவர் லெனின் அவர்களின் பொன்மொழி கண்காட்சிகள் நாடு முழுவதும் கீழ்மட்டம் வரையில் மிகப்பெரிய அளவில் நடத்தப்பட வேண்டும்
- பொதுக் கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள், குழு உரையாடல்கள் மூலமாக லெனின் அவர்களின் போதனைகள் பெரிய அளவில் மக்களிடையே கொண்டு செல்லப்பட வேண்டும்.
- அனைத்து தோழர்களும் தங்களது சித்தாந்த தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக லெனின் அவர்களின் முக்கியமான புத்தகங்களை, குறிப்பாக "அரசும் புரட்சியும்" என்ற புத்தகத்தை தனியாகவும் கூட்டாகவும் படிக்க வேண்டும்.
- கட்சி இலக்கியங்களை விற்பதற்கு ஒவ்வொரு மாநில, மாவட்ட, கிளை கட்சிக் கமிட்டிகள் நிகழ்ச்சிகளை திட்டமிட வேண்டும்.
- பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் கிடைத்த அனைத்து தொடர்புகளையும் நினைவு நூற்றாண்டு நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க வைப்பதற்கு அனைத்து மாநிலங்களும் முன்முயற்சி எடுக்க வேண்டும் ■

*மாபெரும் தலைவர் லெனின் நீடூழி வாழ்க!*

*மார்க்சிசம்–லெனினிசம், சிப்தாஸ் கோஷ் சிந்தனை நீடூழி வாழ்க!*

புரட்சிகர வாழ்த்துக்கள்

தோழமையுடன் உங்கள்

**பிரவாஸ் கோஷ்**

பொதுச்செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டு



கொல்கத்தா



சென்னை

## கூட்டு இயக்கத்தின் சார்பாக பத்திரிகையாளர் சந்திப்பு




உள்ளூர் மக்கள் விரும்பாத, ஏற்காத, கடுமையாக எதிர்க்கும், மேல்மா சிப்காட் விரிவாக்கம், பரந்தூர் விமான நிலையம் போன்ற திட்டங்களைக் கைவிடக் கோரியும், மேல்மா சிப்காட் போராட்டத்தில் குண்டர் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தோழர் அருள் ஆறுமுகம் அவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், 2021 சட்டமன்றத் தேர்தலின்போது வள்ளியூரில் வாக்குறுதி அளித்தபடி கூடங்குளம் மக்கள் மீது போடப்பட்டிருக்கும் அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெறக் கோரியும் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பில் பல்வேறு அமைப்புகளுடன் தோழர் செபாஸ்டின், ஒருங்கிணைப்பாளர், வாழ்வுரிமைக்கான மக்கள் போராட்டக் கமிட்டி ■

**வறட்சி நிவாரணம், கடன் தள்ளுபடி வழங்க கோரியும், வைகை குண்டாறு கால்வாய் இணைப்பை விரைவுப்படுத்த கோரியும் ஏஐகேகேஎம்எஸ் மாநில கமிட்டி உறுப்பினர் தோழர் கோவிந்தராசு தலைமையில் ஏஐகேகேஎம்எஸ் சார்பில் ஆவுடையார் கோயிலில் 7.11.2023 அன்று நடந்த ஆர்ப்பாட்டம்**







**குடியிருப்புகளைப் பாதிக்கும் வகையில் போடப்படும் குழாய்களை அகற்ற கோரியும் இழப்பீடு வழங்க கோரியும் சிபிஐ (மா–லெ) நடத்திய ஆர்ப்பாட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மதுரை மாவட்ட செயலாளர் தோழர் வால்டேர் வாழ்த்துரை**

# தமிழக அரசாங்கத்தின் விவசாயிகள் விரோதப் போக்குக்கு எதிராக வெகுண்டெழும் விவசாயிகள்

இந்தியாவில் விவசாயிகள் வாழ்வா சாவா என்ற போராட்டத்தை தினந்தோறும் சந்தித்து வருகின்றனர். வாங்கிய கடனைத் திருப்பித்தர இயலவில்லை, நட்ட பயிர் வறட்சியாலும் வெள்ளத்தாலும் சேதமாகிவிடுகிறது, விளைச் சலுக்கு குறைந்தபட்ச ஆதார விலை உத்தரவாதப் படுத்தப்படவில்லை, பயிர் காப்பீட்டுத் தொகை சரியாக மதிப்பிடப்பட்டு கிடைப்பதில்லை, கால்நடைகளை வளர்ப்பதும், கறவை மாடுகளைப் பராமரிப்பதும், விற்ற பாலுக்கு அடக்க விலை கிடைக்காததுமென பலப் பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை விகிதம் ஆண்டுக்கு ஆண்டு உயர்கின்றது. இதையும் மீறி, வேறு வழியின்றி விவசாயம் ஒன்றையே வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் இந்தியாவின் 70% மக்கள், இந்திய ஏகபோக கார்ப்பொரேட்டு களின் நலனுக்காகப் போடப்படும் திட்டங்களுக் காகவும் நிலத்தைப் பறிகொடுக்கும் கொடுமைக்கு அடிக்கடி தள்ளப்படுகின்றனர். வாழ் வாதாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள அமைதியான முறையில் போராடினாலும் அவர்களை கடுமையான சட்டங்களின் கீழ் பொய் வழக்கு புனைந்து கைது செய்வதும் மிரட்டுவதும் எல்லா மக்கள் விரோத கார்ப்பொரேட் நல அரசாங்கங்களும் தொடர்ந்து செய்கின்றன.

### சிப்காட் திட்டங்களுக்காக விவசாய விளைநிலங்கள் பறிப்பு

திமுக அரசாங்கம் சமீபத்தில் புதிதாக 11 சிப்காட் தொழிற்பேட்டைகளை அமைக்க முடிவு செய்தது. அதற்கு, வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்தல், தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு போன்ற நோக்கங்களை காரணமாக கூறுகிறது. தொழில் வளர்ச்சி அடைவதையோ வேலை வாய்ப்பு உருவாவதையோ மக்கள் வரவேற் கிறார்கள், ஆனால் அதற்கு தரிசு நிலங்களைப் பயன்படுத்தாமல் முப்போகம் விளையும் விவசாய நிலங்களை குறிவைத்து கையகப்படுத்துவதைக் கண்டு விவசாயிகள் எப்படி கொதித்தெழாமல் இருக்க முடியும்?

சென்ற வருடம் கோவை மேட்டுப்பாளையம் அன்னூரில் சிப்காட் அமைக்க 6 கிராமங்களில் 3731 ஏக்கர் விவசாய நிலம் கையகப்படுத்த திமுக அரசாங்கம் அரசாணை வெளியிட்டது. அதை எதிர்த்து நமது நிலம் நமதே என்ற அமைப்பை உருவாக்கி 17 இடங்களில் விவசாயிகள் போராட்ட அலுவலகங்களை அமைத்து கடுமையாகத் தொடர்ந்து போராடினர். இதன் விளைவாக இத்திட்டம் கைவிடப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன.

ஆனால் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு மேல்மா சிப்காட் திட்டத்திற்காக 3வது அலகு (3rd unit) நிறுவ 11 கிராமங்களில் உள்ள 3,174 ஏக்கர் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப் படும் என மாநில அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. இதனால் வாழ்வாதாரங்களை இழந்து 2500 குடும்பங்கள் நடுதெருவிற்கு வந்துவிடும். விளைநிலம் கையகப்படுத்துவதை எதிர்த்து நான்கு மாதங்களாக விவசாயிகள் அமைதியான முறையில் போராடி வந்தனர். எந்த பதிலும் கிடைக்காததால், நவம்பர் மாதத் துவக்கத்தில் ஊர்வலமாகச் சென்று ஆட்சியரிடம் முறையிட விவசாயிகள் முடிவு செய்தனர். காவல்துறை அனுமதி மறுத்தது. சுமார் 20 விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். அதில் 7 பேர் மீது குண்டர் சட்டம் போடப்பட்டது. அதற்கு பல்வேறு காரணங்களைப் புனைந்து அவர்களின் உறவினர்களிடம் மிரட்டி எழுதி வாங்கியது காவல்துறை. இந்தச் சம்பவத்தை எதிர்த்து தமிழகம் முழுவதும் விவசாயிகளிடமும் பொதுமக்களிடமும் கடுமையான கண்டனம் எழுந்த பிறகு, ஒரு இளைஞரைத் தவிர ஆறு பேர் குண்டர் சட்டத்திலிருந்து விடுவிக்கப் பட்டனர். ஆயினும் அனைவரின் மீதும் பிற பிரிவு வழக்குகள் தொடர்கின்றன. அமைதியாகப் போராடிய விவசாயிகள் மீது குண்டர் சட்டம் போடப்பட்டது இந்தியாவிலேயே முதல்முறை என பலர் சுட்டிக்காட்டினர்.

### பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு எதிரான பலத்த எதிர்ப்பையும் மீறி நிலம் கையகப்படுத்த அரசாணை

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் விமான நிலையம் அமைக்க விவசாய விளை நிலங்களை எடுக்க எதிர்ப்பு தெரிவித்து 13 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 487 நாட்களாக தொடர்ந்து போராடி வருவதோடு கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானங்களை நிறைவேற்றி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். இதுகுறித்து நமது இதழில் முன்பு விரிவான கட்டுரையை வெளியிட்டிருந்தோம். இந்நிலையில் மக்களின் கோரிக்கையை சிறிதும் மதிக்காமல் 20 கிராமங்களில் 5746 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நவம்பர் 24 அன்று அரசாணை வெளியிட்டுள்ளது மாநில திமுக அரசாங்கம். இத் திட்டத்தை அப்பகுதி பொதுமக்களும் சுற்றுச் சூழலியளாளர்களும் எதிர்த்தபோதிலும், நிபுணர்குழு ஆய்வு இன்னமும் முடிவுபெறாத நிலையிலும் முதல்வர் ஸ்டாலின் நிலம் கையகப்படுத்த அரசாணை வெளியிட்டுள்ளார். மக்கள் குரலை அலட்சியப்படுத்தி, இதன்மூலம் தனது எஜமானர்களான இந்திய ஏகபோக கார்ப்பொரேட் முதலாளிகளின் நலனுக்காக அவ்வாறு செய்துள்ளார்.

### சாலை விரிவாக்கப்பணிகளுக்காக விவசாய நிலங்களைப் அபகரிக்கும் திட்டங்கள்

4 மாதம் முன்பு கோவை சக்தி சாலையை 30கிமீ நீளத்திற்கு சாலையை அகலப்படுத்தும் திட்டத்தை எதிர்த்து விவசாயிகள் போராடினர். இதனால் 1000 ஏக்கர் விவசாய நிலம் வீணாகும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதே போல் பெரம்பலூர் மானாமதுரை தேசிய நெடுஞ்சாலை விரிவுபடுத்தும் பணி சுமார் 91.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடந்து வருகிறது. இந்தத் திட்டத்தில் திருவையாறில் புறவழிச் சாலை (பைபாஸ்) அமைக்கப்பட இருக்கிறது. இதற்காக சுமார் 400 ஏக்கர் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப் பட்டுள்ளன. ஏற்கெனவே இருக்கும் சாலையை விரிவுபடுத்தினால் போக்குவரத்து நெரிசல் குறைந்துவிடும். ஆனால் ஏற்கெனவே இருக்கும் சாலையில் இரு பக்கங்களிலும் பணக்கார வியாபாரிகள் சட்டத்திற்குப் புறம்பாக பல ஆண்டுகளாக ஆக்கிரமித்துள்ளனர். பணக்காரர் களின் ஆக்கிரமிப்பை அகற்றாமல் ஏழைகளின் விளைநிலத்தை அபகரித்து பைபாஸ் சாலையை அகலமாக அமைக்க ஆட்சியாளர்கள் திட்ட மிட்டுள்ளார்கள். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் விவசாயிகள் ஏற்கெனவே பல கட்ட போராட்டங்களை நடத்தியுள்ளனர். விளை நிலங்களை அழித்து சாலை அமைக்க வேண்டாம் என மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரி களிடம் கோரிக்கை வைத்து இன்றும் போராடி வருகின்றனர்.

சேலம் எட்டுவழிச்சாலை திட்டத்தை எதிர்த்து, பல ஆண்டுகளாகப் போராடி சிறைக் கொடுமை களை அனுபவித்து இறுதியாக திட்டம் கைவிடப் பட்டது என நினைத்துக்கொண்டிருந்த மக்களுக்கு அதிர்ச்சியூட்டும் வகையில் அத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த சமீபத்தில் மத்திய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது. இதற்கு தமிழக திமுக அரசாங்கமும் இசைவு தெரிவித் துள்ளது. விவசாயிகள் மீண்டும் போராடத் துவங்கிவிட்டார்கள். திமுக, தான் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு விட்டு திட்டம் செயல்படுத்த அனுமதியளித்ததை எதிர்த்து மாநில அரசாங்கத்துக்கு எதிராக விவசாயிகள் தீவிரமாகப் போராடி வருகின்றனர்.

### காவல்துறை, நிர்வாகம் மூலம் விவசாயிகளை அச்சுறுத்தி வரும் திமுக அரசாங்கம்

விவசாயிகளின் நண்பன் என காட்டிக் கொண்டிருந்த திமுக, அதிகாரத்திற்கு வந்தவுடன் போராடுபவர்கள் மீது காவல்துறையை ஏவி தாக்குவதும் கைது செய்வதும் தொடர்ந்து நடத்தி வருகின்றது. வீடுகளுக்குச் சென்று மிரட்டுவது, இளைஞர்கள்மீது பொய் வழக்குகளைப் போடுவது, கைபேசிகளைப் பிடுங்கி வைத்துக் கொள்வது போன்ற அடாவடிகளை காவல் துறையினர் செய்து வருகின்றனர். சீருடையில் இல்லாத காவல்துறையினர் குடியிருப்பு பகுதிகளில் சுற்றுவதும் பத்திரிகையாளர்களை அப்பகுதிகளுக்குச் செல்லவிடாமல் தடுப்பதும் தினமும் நடந்துகொண்டிருக்கின்றன. பரந்தூரில் சாலையில் மாதக்கணக்கில் இரும்பு தடுப்புகளை அமைத்து வருவோர் போவோரை விசாரிக் கின்றனர். விவசாய சங்க மாநிலத் தலைவர்கள் பரந்தூருக்குச் சென்று விவசாயிகளைச் சந்திக்க முன் அனுமதி பெறவேண்டும் என்று நிபந்தனை போடப்பட்டுள்ளது. இது முற்றிலும் ஜனநாயக விரோதமானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆன்லைனில் விண்ணப்பித்து பிறகு பரந்தூருக்குச் சென்றாலும் அத்தலைவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். ‘நாங்கள் திரும்பிச் சென்று விடுகிறோம் என்று சொல்லிய பிறகும் வாகனத்திலிருந்து இழுத்து கீழே தள்ளப்பட்டு, 20கிமீ தொலைவில் இருக்கும் காவல் நிலையத்திற்கு நாங்கள் கொண்டு செல்லப்பட்டு நீண்டநேரம் வைத்திருக்கப் பட்டோம். எனது வாழ்நாளில் இதுவரை இப்படிப் பட்ட நிகழ்ச்சியை சந்தித்ததில்லை’ என ஒரு விவசாயச் சங்கத் தலைவர் பேட்டியளித் திருக்கிறார். மேலும், தற்காப்புக் கைது என்ற பெயரில் ஆகஸ்ட் மாதம் முதல் பலபேர்களை காவல்துறை கைது செய்துள்ளது. சட்டம் ஒழுங்கைப் பேணவேண்டும் என்று சொல்லி காவல்துறை நீதித்துறைக்கே அப்பாற்பட்டு நடப்பதாக பல செயல்பாட்டாளர்கள் தெரிவிக் கின்றனர். பரந்தூரில் சுமார் 2500 காவல் துறையினரைப் போட்டு மக்களைக் கண்காணித்து வருகின்றனர். போராட்டக்காரர்கள் என்று சொல்லி பலரை திருமணமண்டபங்களில் அடைத்து வைத்திருக்கின்றனர். தமிழகத்தில் திருமண மண்டபங்கள் சிறைச்சாலைகளாகி வருகின்றன.

அதே சமயம், திமுகவினரால் வெளியிலிருந்து சில நூறுபேர் திரட்டப்பட்டு அப்பகுதில் ஊர்வலமாக, ‘நிலத்தை எடு, வேலை கொடு’ என்ற கோஷங்களை முன்னிறுத்தி நவம்பர் 22 அன்று ஊர்வலம் நடத்த அனுமதிக்கப்பட்டது. இவர்கள் யாரும் பாதிக்கப்பட்ட 11 கிராம மக்கள் இல்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேல்மா சிப்காட் திட்ட எதிர்ப்பாளர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்ததுதான் திமுகவின் மிரட்டலின் உச்சக் கட்டமாகும். கைதிற்கு முன்பு நோட்டிஸ் கொடுக்கவில்லை. கைது செய்தவர்களை எங்கே எந்த சிறைச் சலைக்குக் கொண்டுசென்றார்கள் என்ற விவரமும் சொல்லப்படவில்லை. வெவ்வேறு சிறைச்சாலைகளில் குழுக்களாக அவர்கள் அடைக்கப்பட்டனர். எதிர்ப்பு வலுத்ததால் குண்டர் சட்டத்திலிருந்து விவசாயிகளை விடுவிக்க முதல்வர் ஆணைபிறப்பித்தார் என்றாலும் அப்படி கைது செய்ய உத்தரவிட்ட காவல்துறை அதிகாரிகள்மீது எந்த நடவடிக்கை யுமில்லை. ஆக இது நாடகம்தான் என்பதை யூகிப்பது கடினமல்ல. திமுக ஆதரவாளர்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## தமிழக அரசாங்கத்தின் விவசாய விரோதப் போக்கு . . .

# போராடும் விவசாயிகளுக்கு அனைத்துத் தரப்பு மக்களும் ஆதரவு தரவேண்டும்

*3ம் பக்கத் தொடர்ச்சி*

களாலேயே இதனை ஜீரணிக்க முடியவில்லை. கருத்துச் சுதந்திரம், ஜனநாயக முறையில் எதிர்ப்பைத் தெரிவிக்கும் சுதந்திரம், பொதுவெளியில் நடந்து செல்லும் சுதந்திரம்கூட தமிழகத்தில் பறிக்கப்பட்டுள்ளன, முற்றிலும் போலீஸ் ராஜ்யமாக, ஒரு ஃபாசிச நிர்வாகமாக திமுக அரசாங்கம் இருந்துகொண்டிருக்கின்றது எனக் கூறினால் அது மிகையாகாது.

### மத்திய பாஜக ஆட்சியைப்போலவே இந்திய ஏகபோக முதலாளிகளின் திட்டங்களை மாநிலத்தில் திமுக அமுலாக்குகிறது

2013ஆம் ஆண்டில் காங்கிரஸ் அரசாங்கம் நிலம் கையகப்படுத்தும் மசோதாவை நிறைவேற்றி சட்டமாக்கியது. இந்திய அரசாங்கத்தின் திட்டங்களுக்கும், இராணுவ, அணுசக்தி, விண்வெளி திட்டங்களுக்கும் நிலத்தை கையகப்படுத்தும் முழு உரிமை அரசாங்கத்திற்கு உள்ளது என்றும், தேசத்தின் வளர்ச்சிக்காக அரசாங்கங்களும், நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக தனியார் நிறுவனங்களும் நிலத்தை கையகப்படுத்தலாம், அதற்கு உரிய சந்தை மதிப்பை மக்களுக்கு நஷ்ட ஈடாகத் தரவேண்டும் என்றும் அச்சட்டம் கூறுகிறது. 2014இல் மத்தியில் ஆட்சிக்கு வந்த பாஜக இந்த சட்டத்திற்கு நடைமுறை விதிகளை வகுத்தது. நிலம், மாநிலத்திற்குக் கீழ் வருவதால் அதைக் கையகப்படுத்தும் அதிகாரத்தை இந்த விதிகளின் கீழ் மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் வழங்க விதிமுறைகளை வகுத்தது. தமிழ்நாடும் நிலத்தை கையகப்படுத்த லாடான் (Land Acquisition Agency of Tamilnadu LAATAN) என்ற முகமையை உருவாக்கியுள்ளது.

தனியார் நேரடியாக நிலத்தை கையகப்படுத்துவதில் சிக்கல்கள் எழுவதால், மாநில அரசாங்கம் 'தொழில் வளர்ச்சிக்கான மாநிலத் திட்டம்' என்ற பெயரில் இடத்தை அபகரித்து தனியார் குழுமங்களுக்கு கூட்டாக வழங்க 'சிப்காட் தொழிற்பேட்டை'களை நிறுவுகிறது. இந்த பேட்டைகளில் பொதுத்துறை அல்லது அரசுத் துறை நிறுவனங்கள் வரப்போவதில்லை. தனியார் தோல் பதனிடும் ஆலைகள், சாயப் பட்டறைகள், கனிம உருக்காலைகள், ரசாயன ஆலைகள், மருந்துப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள், மின்னணு சாதன மற்றும் வாகன தயாரிப்பு நிறுவனங்கள், கார் பேட்டரி சோலார் செல் தயாரிப்பு ஆலைகள் என சுற்றுச் சூழலைப் பாதிக்கும் ஏராளமான தொழில்கள் சிப்காட்டில் நிறுவப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஈரோடு பெருந்துறை சிப்காட்டில் உள்ள நிறுவனங்கள் ஏற்படுத்தும் காற்று மாசுபாடு நிலத்தடிநீர் பாதிப்பு ஆகியவற்றால் எழுதிங்கள்பட்டி கிராமத்தில் 100 வீடுகளுக்குமேல் காலி செய்துவிட்டு சென்றுவிட்டனர்.

மேலும், திமுக சமீபத்தில் ஃபேக்டரி சட்ட திருத்தம் ஒன்றைச் செய்து 12 மணிநேர வேலை நாள் சட்டத்தைக் கொண்டுவந்தபோது அதற்கு எதிராக நடந்துகொண்டிருந்த சட்டமன்ற அமலியில், சப்தமின்றி, நில ஒருங்கிணைப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றிவிட்டது. அதன்படி ஏரி, குளம், குட்டைகளைச் சுற்றியுள்ள நிலத்தை தனியார் நிறுவனம் வாங்கினால், அந்தப் பொது நீர் நிலைகளும் அத் தனியாருக்கு சொந்தமாகி விடும். பாசனத்திற்கோ, கால்நடைகளின் பயன்பாட்டிற்கோ அந்த நீர்நிலைகளை பொதுமக்கள் பயன்படுத்த முடியாது.

ஆக, பாஜக அரசாங்கம் அஸ்ஸாமிலும் உத்தரகாண்டிலும் உபியிலும் என்ன செய்கிறதோ அவற்றைத்தான் திமுகவும் இங்கு செய்து கொண்டிருக்கிறது.

### தேர்தலுக்கு முன் கொடுத்த வாக்கும் ஆட்சிக்கு வந்தபின் எடுக்கும் நிலைபாடும்

திமுக அரசாங்கம் 2021ல் ஆட்சிக்கு வருவதற்கு முன் 10 ஆண்டுகள் ஆட்சி செய்த அதிமுக அரசின் விவசாய விரோதத் திட்டங்களை எதிர்ப்பதாக தொடர்ந்து காட்டிக் கொண்டது. 2014 முதல் மத்தியில் ஆட்சி செய்யும் பாஜக அரசாங்கத்தின் விவசாய விரோத திட்டங்களையும் நடவடிக்கைகளையும் எதிர்ப்பதாக திமுக தொடர்ந்து அறிக்கை விட்டுக் கொண்டிருந்தது. இவையெல்லாம் வாக்கு வங்கியை தன்பக்கம் ஈர்ப்பதற்காக காட்டிய நாடகமேயன்றி வேறல்ல என்பதை அதிகாரத்திற்கு வந்த பின்பு அப்பட்டமாக வெளிப்படுத்தி விட்டது. எங்கள் போராட்டத்தை ஆதரித்ததால் திமுகவிற்கு வாக்களித்தோம், ஆனால் ஆட்சிக்கு வந்தபிறகு, எங்களை நிலத்திலிருந்து பிடுங்கி எறிந்து வேற்றவர்களாக்கி வருகிறது மாநில அரசாங்கம் என மக்கள் புலம்புகின்றனர். தங்கள் வாழ்வாதாரத்தையும் வீடுகளையும் காப்பாற்றிக் கொள்ள தினந்தோறும் இரவுக் கூட்டம் நடத்தி எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

திமுகவின் விவசாயிகள் விரோதப்போக்கின் சரித்திரம் அது முதன்முதலாக ஆட்சிக்கு வந்த பொழுதிலிருந்தே துவங்குகிறது. 1970களிலே திமுக அரசாங்கம் 1 பைசா மின்சாரக் கட்டணத்தை ஏற்றியதை எதிர்த்து திரு நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் ஒரே நாளில் 17 பேரை சுட்டுக்கொன்றது திமுக அரசாங்கம். எப்பொழுதெல்லாம் ஆட்சியில் இருந்ததோ அப்போது நடந்த விவசாயப் போராட்டங்களை காவல்துறையை ஏவி நசுக்கியுள்ளது. ஆனால் எதிர்க் கட்சியாக இருக்கும்போது விவசாயிகளின் நண்பனைப் போல் காட்டிக் கொள்ள எந்தவொரு சந்தர்ப்பத்தையும் தவற விட்டதில்லை திமுக. சென்ற அதிமுக அரசாங்கத்தின்போது இதே சிப்காட் திட்டத்தை எதிர்த்து விவசாயிகள் போராடிய போது திமுக அதற்கு ஆதரவு தெரிவித்தது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இத் திட்டத்தைக் கைவிடுவோம் என்றது. ஆனால் இப்போது நிலம் கையகப்படுத்த ஆணையிட்டுள்ளது.

### விவசாயிகள் போராட்டத்திலிருந்து இடதுசாரிகள் தனிமைப்பட்டு வருகின்றனர்


எப்போது கூட்டணியில் சேர்ந்தார்களோ அப்போதிலிருந்தே சிபிஐயும் சிபிஎம் கட்சியும் திமுகவின் மக்கள் விரோதத் திட்டங்களுக்கு பாவனை எதிர்ப்பைக் காட்டி வருகின்றன. அறிக்கைகள் விடுவது, மாலைநேரப் போராட்டங்களை நடத்துவது தவிர வேறு நீண்டகால தீவிர தொடர் போராட்டத்தை இவர்கள் நடத்தத் தயாராக இல்லை. தமிழகத்தில் தொடர்ந்து நடைபெறும் விவசாயிகள் போராட்டத்தில் இக்கட்சிகளும் இவற்றின் விவசாயச் சங்கங்களும் தீவிர ஈடுபாட்டைக் காட்டவில்லை. போராட்டம் பெரிய அளவில் நடக்கும்போது வேறு வழியின்றி அவற்றில் இவர்கள் கலந்துகொள்கின்றனர். டெல்லியில் நடைபெற்ற விவசாய இயக்கத்தைப் போல, கோரிக்கை வெற்றிபெறும்வரை போராட்டத்தைக் கைவிடாமல் நடத்த மக்கள் தயாராக இருந்தாலும் இவர்கள் தயாராக இல்லை. மத்திய அரசாங்கத்தில் பாஜகவை அகற்றி தாங்கள் அங்கமாக இருக்கும் 'இந்தியா' கூட்டணியை கொண்டுவந்துவிட்டால் நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடும் என்ற வழக்கமான தேர்தல் பாதையையும் ஆட்சி மாற்றத்தையுமே மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்தபிறகும் தங்கள் நிலமும் வாழ்வாதாரமும் பறிபோவதைக் கண்டு மக்களே 'ஆட்சி மாற்றம் தீர்வைத் தராது' என்ற உண்மையை உணர்ந்த பிறகு, அதே தீர்வை இந்த இடதுசாரிகள் முன்வைத்தால், மக்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?

### போராடும் விவசாயிகளுக்கு அனைத்துத் தரப்பு மக்களும் ஆதரவு தரவேண்டும்

இன்றைய தினம் உலகெங்கும் உணவு நெருக்கடி தீவிரமாகி வருகிறது. உக்ரைன் போரால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு அரிசி கிடைக்காமல் ஆப்பிரிக்க ஏழை நாடுகள் திணறுகின்றன. இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி வெளிச் சந்தையில் அதிக இலாபத்திற்காக அரசி ஏற்றுமதி செய்தால் உள்நாட்டில் விலை பன்மடங்கு உயரும் அபாயத்தை உணர்ந்து மக்களின் அச்ச உணர்வின் அழுத்தத்தால் நாட்டில் அரிசி ஏற்றுமதி தடை செய்யப் பட்டுள்ளது. அதேசமயம் மக்கள்தொகை பெருகிவரும் நமது நாட்டில் பட்டினியும் பஞ்சமும் தலைவிரித்தாடி வருகிறது. ஆனால், குறிப்பாக நமது மாநிலத்தில் விளைச்சல் நிலப்பரப்பு 45 ஆண்டுகளில் 48%யிலிருந்து 36%ஆக குறைந்து விட்டது. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் மேல்தட்டு பணக்கார மக்கள் வாழ்விடங்கள் மீது கைவைப்பதில்லை. ஏழை மக்களின் வாழ்விடங்களும் விவசாய நிலங்களும் தான் எளிய இலக்காக தாக்கப்படுகின்றன. இன்றைய நெருக்கடி மிகுந்த முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தொழில் வளர்ச்சி சாத்தியமில்லை என்ற உண்மையையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இதனால்தான் ஈரோடு, கோவை, திருப்பூர், அம்பத்தூர் போன்ற பல இடங்களில் உற்பத்தியும் சிறுகுறு நிறுவனங்களும் இலட்சக்கணக்கில் மூடப்பட்டு வருகின்றன. சிப்காட் தொழிற்பேட்டை, விமான நிலையம், சாலை விரிவாக்கம் என்றெல்லாம் தரிசு நிலங்களை விட்டுவிட்டு விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டால் இவை மீண்டும் விவசாயத்திற்கு மீட்கமுடியாதவையாகவும், நாட்டின் 70% மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதாகவும் அமையும். எனவே கேள்விக் கிடமின்றி இத்தகைய திட்டங்களையும் நடவடிக்கைகளையும் அனைத்துத் தரப்பு மக்களும் ஒன்றுபட்டு எதிர்த்தாக வேண்டும் ■

### மருத்துவத் துறையில் கட்டற்ற தனியார்மயம்

### மெடிகல் சர்வீஸ் சென்டர் அமைப்பின் 7வது அகில இந்திய மாநாடு கடும் விமரிசனம்




மெடிகல் சர்வீஸ் சென்டர் என்ற சமூக மருத்துவ அமைப்பின் 7வது அகில இந்திய மாநாடு நவ 4–5, 2023இல் பெங்களூருவில் நடைபெற்றது. ISECஇன் கௌரவ பேராசிரியரும் குல்பர்கா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தருமான டாக்டர் M V நத்கர்னி மாநாட்டைத் துவைக்கி வைத்தார். மிகச் சிறந்த மருத்துவ கட்டுமான வசதியை உடனடியாக உறுதி செய்து மருத்துவக் கல்வியையும் சேவையையும் இலவசமாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மக்களின் ஆரோக்கியத்தையும் மருத்துவக் கல்வியையும் கார்ப்பொரேட் மயமாவதிலிருந்து காக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மாநாட்டிற்கு தமிழகத்திலிருந்து மருத்துவர்களும், செவிலியர்களும், சமூக சுகாதார பணியாளர்களும் சென்று கலந்து கொண்டனர் ■

# மகளிர் இடஒதுக்கீடு மசோதா தேர்தலைக் குறிவைத்து நகர்த்தப்பட்டதேயொழிய மகளிர் நலன் கருதி அல்ல

மக்களவை, மாநில சட்டப் பேரவைகளில் பெண்களுக்கு *33* சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் "நாரி சக்தி வந்தன் மசோதா" மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா *128*வது அரசியலமைப்பு திருத்த மசோதா ஆகும். இந்த மசோதா மக்களவை, மாநிலங்களவையில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டும். இதன் பிறகு நாட்டில் உள்ள மொத்த மாநிலங்களில் சுமார் *50* சதவீத மாநிலங்களின் சட்டப்பேரவை களில் மசோதாவை நிறைவேற்ற வேண்டும். இந்த மசோதாவை செப்டம்பர் *19, 2023* அன்று அவசர அவசரமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் சிறப்புக் கூட்டம் எனக் கூட்டி மத்திய பாஜக அரசாங்கத்தால் முன்வைக்கப் பட்டது. இதை கொண்டுவரும்போது, 'நாரி சக்தி வந்தன் அதிநியம்' (மகளிர் சக்தியை வணங்கும் சட்டம்) என்ற இந்த மசோதாவை முன்னெடுத்துச் செல்ல 'கடவுள்' தனக்கு சந்தர்ப்பத்தை அளித்துள்ளார் என பிரதமர் மோடி கூறினார்.

மாற்றியமைக்கப்பட்ட புதிய தொகுதிகளின் அடிப்படையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா அமல் செய்யப்படும் என்றவர் கூறினார். அதனை புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பின்தான் செய்யமுடியும். ஒவ்வொரு பத்தாண்டு இடைவெளியில் செய்யப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பு *2021* செய்திருக்க வேண்டும். கொரோனா தொற்றின் காரணமாக தள்ளிப் போடப்பட்டத்தாக சொல்லப்பட்டாலும் அதன் பிறகு இரண்டாண்டுகளாக இன்னமும் கணக்கெடுப்பு நடத்தவில்லை. காலதாமதத்திற்கு காரணமும் சொல்லப்படவில்லை. இச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு *15* ஆண்டுகள் செல்லு படியாகும். அதன்பிறகு காலத்தை நீட்டித்துக் கொள்வதோ கைவிடுவதோ அப்போதைய அரசாங்கம் முடிவு செய்யும்.

ஆக, மக்கள்தொகை கணக்கெடுப்பும் தொகுதிகளில் புதிய மாற்றமும் கொண்டுவர சுமார் ஏழு ஆண்டுகளாவது ஆகும். பணிகளை முடுக்கிவிட்டாலும் *2029* தேர்தலில்தான் இச் சட்டம் அமலாக்கப்பட முடியும். பின் ஏன் பிரதமர் மோடி அவசரம் காட்டியுள்ளார்? காரணம் அறிவது ஒன்றும் கடினமல்ல. கடந்த பத்தாண்டுகால பாஜக ஆட்சி நாட்டு மக்களிடம் கடும் கோபத்தையும் வெறுப்பையும் சம்பாத்தித் துள்ளது. விண்ணைமுட்டும் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரச் சரிவு, விவசாயிகள் தற்கொலை, பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள் கொலைகள் அதிகரிப்பு, ஊழல், கல்வி மருத்துவம் ஆகிய சேவைகளில் வீழ்ச்சி, கருத்துச் சுதந்திரத்தின்மீது தாக்குதல், நீதித்துறையில் தலையீடு, சாதி மத இனவெறிக் கலவரங்கள் அதிகரிப்பு, அமைதி யின்மை ஆகியவையால் மோடி அரசாங்கம் மிகப் பெரிய கெட்டபெயரைச் சந்தித்துவிட்டது. அனைத்து ஜனநாயக மரபுகளும் மதிப்புகளும் மீறப்பட்டு ஜனநாயகம் கேலிக்கூத்தாகிவிட்டது. அம்பானி, அதானி ஆகிய இந்திய கார்ப்பொரேட் முதலாளிகளுக்கு வரிச் சலுகைகள், கடன் தள்ளுபடி, அரசாங்க விதிகளை மீறி நிதி ஆதாரங்களையும் அந்நிய சந்தை முதலீடுகளையும் அவர்களுக்கு ஏற்படுத்தித்தருவதில் எல்லையற்ற முறைகேடுகள் யாவும் அம்பலமாகி மக்களிடம் மிகுந்த கெட்டபெயரை பாஜக அரசாங்கம் ஈட்டிவிட்டது. இச் சூழலில் நவம்பர் இறுதியில் மத்தியப் பிரதேசம், தெலுங்கானா, சத்தீஸ்கர், ராஜஸ்தான், மிசோரம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கிவிட்டது. இனி வழக்கம்போல் இந்துமதவாதம், ராமர் கோயில் பிரச்சினை போன்றவற்றை வைத்து தொடர்ந்து அரசியல் செய்வது கடினம் என்பதை உணர்ந்த பாஜக எதைச்செய்தாவது மக்களிடம் நல்ல பெயரை வாங்கமுடியுமா என்ற நப்பாசையில் 'மகளிர் இடஒதுக்கீடு மசோதா'வை கையிலெடுத்து இதன் மூலம் பெண்கள் வாக்குகளைப் பெறமுடியுமா என்று யத்தனித்துள்ளது. பெண்கள்மீது திடீர் அக்கறை வந்துவிட்டதன் காரணம் இதுதானாகும்.

### பெண்கள்மீதான குற்றங்கள் அதிகரிப்பதில் ஆர்எஸ்எஸ் பாஜக தலைவர்களின் பங்கும் ஈடுபாடும்

மகளிரைக் காப்பாற்ற கடவுள் அனுப்பிவைத்த தேவதூதரைப்போல் மகளிர் சக்தியை வணங்கும் சட்டம் எனக்கூறி மசோதாவை கொண்டுவந்த பிரதமர் மோடி, ஏன் *2019* தேர்தலில் தனது கட்சியில் பெண்களுக்கான எம்பி சீட்டுகளில் *33%* வழங்கவில்லை? போட்டியிட்ட *437* இடங்களில் *53* மட்டுமே அதாவது, *12%* மட்டுமே பெண்கள் போட்டியிட்ட தொகுதிகளாகும். *2014*இல் பாஜக போட்டியிட்ட இடங்களில் வெறும் *8.8* இடங்களே பெண் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பெண்களுக்கு அதிக இடங்கள் ஒதுக்குவதில் முன்னுதாரணமாக பாஜக ஏன் திகழவில்லை? பெண்களுக்காக இவர்கள் 'பாடுபடுவதை' யார் தடுத்தார்கள்? மாறாக, இவர்கள் ஆட்சியில் பெண்களுக்கு நடப்பதென்ன?

*2022*இல் மட்டும் பெண்கள்மீதான குற்றங்கள் *30,900* என்றும் அதில் *6,900* குடும்ப வன்முறைகள் என்றும் தேசிய மகளிர் ஆணைய அறிக்கை கூறுகிறது. முந்தைய ஆண்டு *2021*ஐக் காட்டிலும் இந்த ஆண்டு பாலியல் வன்புணர்வு, வரதட்சணைக் கொடுமை, குடும்ப வன்முறை ஆகியவை அதிகரித்துள்ளதாகவும் அறிக்கை கூறுகிறது. *2021*ல் *31,677* வன்புணர்வு குற்றங்கள் பதிவாகியிருக்கின்றன. இதுவும் அதற்கு முந்தைய ஆண்டு *2020*இல் *28,045*ஆக இருந்தது. புகார் அளிக்கப்படாத குற்றங்கள் நிச்சயம் பல மடங்கு இருக்கும். தேசிய அளவில் பதிவாகிய குற்றங்களில் *54%* பாஜக ஆளும் உபியில் மட்டுமே நடந்துள்ளது. அதேபோல பாஜக ஆளும் மபியில், மொத்த தேசிய எண்ணிக்கையில் *15.8%* பாலியல் வன்புணர்வுக் குற்றங்கள் *2022*இல் நடை பெற்றுள்ளன. கருவிலேயே கொல்லப்படும் பெண் சிசுக்கள் *5* இலட்சம்! கடந்த இருபதாண்டு களாக *90* இலட்சம் சிறுமிகள் 'காணாமல்' பேயிருக்கின்றனர். தினமும் *20* வரதட்சணைக் கொடுமை மரணங்கள் நடக்கின்றன, அதில் *6* உபியில் நடக்கின்றது. நாட்டில் *3* இல் *1* பெண் உடல்ரீதியாக அல்லது பாலியல்ரீதியாக தொல்லைக்கு உள்ளாகிறாள் என தேசிய குடும்ப சுகாதார சர்வே கூறுகிறது. இதுதான் பாஜக தலைமையில் நாட்டின் குறிப்பாக அவர்கள் ஆளும் மாநிலங்களின் நிலைமை.

### பெண்கள் மீதான ஆர்எஸ்எஸ் – பாஜகவின் மனப்பான்மை

இந்துத்துவ வெறி கொண்ட ஆர்எஸ்எஸ் பாஜக சங் பரிவாரம் பெண்களைப் பற்றிய தவறான மனப்போக்கை வெளிப்படையாகவே காண்பித்து வருகின்றது. பாலியல் வன்புணர்வு இந்திய கிராமங்களில் நடப்பதில்லை, நகரங்களில்தான் நடக்கின்றது என ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் சமீபத்தில் சர்ச்சையை கிளப்பிவிட்டு, பெண் என்பவள் கணவனுடனான ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு அவரால் பார்த்துக் கொள்ளப்பட வேண்டியவள் என்று கூறியிருக் கிறார். உபி முதல்வர் யோகி ஆதித்யநாத், 'பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்பவர் களுக்கு சுதந்திரம் அனுமதிக்கக்கூடாது' என எழுதியுள்ளார். அதுமட்டுமல்ல, *2010*ல் மகளிர் இடஒதுக்கீடு மசோதா ராஜ்யசபாவில் முன்வைக்கப்பட்டபோது, இதே யோகி ஆதித்யநாத் கூறினார்: "இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் இந்திய அரசியல் அமைப்பே மூழ்கிவிடும். ...ஆண்கள் 'பெண்பால்' குணாதிசயங்களை வளர்த்துக்கொண்டால் அவர்கள் கடவுளர்களாக ஆவார்கள். ஆனால் பெண்கள் 'ஆண்பால்' குணாதிசயங்களை வளர்த்துக் கொண்டால் அவர்கள் ராட்சஷிகளாகமாறிவிடுவார்கள். ...பெண்விடுதலை குறித்த மேற்கத்திய கருத்துக்களை இந்திய பின்னணியில் சரியாக ஆய்வுசெய்ய வேண்டும்".

இதேபோல, சங்பரிவார் தொடர்புடைய மகரிஷி லக்ஷ்மன்தாஸ் உதஸி ஆசிரமத்தைச் சேர்ந்த பஜ்ரங் முனி என்பவரும், முஸ்லிம் பெண்களை பாலியல் வன்புணர்வு செய்வேன் என வெளிப்படையாக பேசி கைது செய்யப் பட்டார். பெயிலில் எளிதாக வெளிவந்த அவர், "அப்படி பேசியதற்காக எனக்கு ஒன்றும் குற்ற உணர்வு இல்லை" என்கிறார். இந்து சமூகத்தை பாதுகாக்க வந்தவர்களாகக் கூறிக்கொள்ளும் இவர்களைப் பொறுத்தவரை இந்து பெண்கள் வேறு சாதியை அல்லது மதத்தை சார்ந்த ஆணை காதலிக்க அல்லது திருமணம் செய்யக் கூடாது. அப்படி செய்தால் அந்தப் பெண் கடுமையாக தண்டிக்கப்படுவார். பல சந்தர்ப்பங்களில் தந்தையாலேயே அப்பெண் கொல்லப்பட்டிருக் கிறார்கள். எனவேதான் முஸ்லிம் ஆண் இந்து பெண்ணைத் திருமணம் செய்வதை இந்துத்துவ வாதிகள் 'லவ் ஜிகாத்' என்ற பதத்தால் அழைக்கத்துவங்கினர்.

சென்ற வருடம் உத்திர பிரதேசத்திலும் மத்திய பிரதேசத்திலும் பாஜக ஆளும் பிற மாநிலங் களிலும் மதமாற்ற திருமணத்திற்காக மதம் மாறுவதை தடுக்கும் "லவ் ஜிகாத் சட்டம்" என்று அறியப்பட்ட சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது, திருமணம் என்பது ஒருவரின் வாழ்வதற்கான உரிமையும், அவர் தான் தேர்ந்தெடுத்த எவரையும் மணக்கும் உரிமையையும் உத்திரவாதப்படுத்தும் அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு *21*ஐ மீறும் செயலாகும். ஆனால் பாஜக தலைவர்களும் அரசாங்கங்களும் துணிச்சலாக அனைத்து மரபுகளையும் மீறி வருகின்றனர். பெண்களைக் குறித்து இத்தகைய மனநிலையை, அணுகு முறையைக் கொண்ட இந்தக் கட்சியினர் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றி தங்களை மகளிர் நலனுக்காக தாங்கள்தான் குரல் கொடுக்கும் நாயகர்கள்போல காட்டிக்கொள்வது அப்பட்டமான கபட நாடகமேயன்றி வேறல்ல.

### பாராளுமன்றத்தில் வெறுமனே இடஒதுக்கீடு கொடுத்துவிட்டால் மகளிர் வாழ்நிலை மேம்பட்டுவிடுமா

முதலில் ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேர்தலில் பங்கேற்பவர்கள் ஓட்டு வங்கியை வைத்து அதிகாரத்தைத் தேடிக் கொள்ளும் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ கட்சியினர் ஆவர். இவர்கள் தேர்தலில் நிற்பது பதவி, அதிகாரம் ஆகியவற்றை அனுபவிக்கவும் யாரும் கேள்வி கேட்கமுடியாத அளவிற்கு எதையும் செய்யும் உரிமத்தைப் பெறவும்தானே ஒழிய, மக்களுக்கு நல்லது செய்வதற்கல்ல. இக்கட்சிகள் ஒரு பெண்ணை வேட்பாளராக நிறுத்தினால், அவர், கட்சிக்கு எதிராகச் சென்று பெண்களின் நலனுக்குக் குரல் கொடுக்க முடியுமா? அல்லது அவரும் தான் சார்ந்த கட்சியின் அதே மக்கள் விரோத, ஏன், பெண்கள் விரோதக் கொள்கையை ஆதரிக்கத்தானே வேண்டும்? நாட்டில் பெருகிக் கொண்டிருக்கும் பெண்கள்மீதான வன்கொடுமைத் தாக்குதல் களுக்கு எதிராக பாஜக மகளிர் எம்பிக்களும் அமைச்சர்களும் வாயைத் திறந்தார்களா? பாஜக ஆளாத மாநிலங்களில் அப்படிப்பட்ட கொடுமைகள் நடந்தால் மட்டும் கண்ணீர் சிந்துவதுபோல் காட்டி ஓட்டு வங்கியை அதிகரித்துக் கொள்ள முயற்சிப்பார்கள்.

இரண்டாவதாக, பஞ்சாயத்து தேர்தலில் மகளிர் இடஒதுக்கீடு ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்றது. ஆனால் அங்கு மகளிர் வேட்பாளர்கள் வெறும் டம்மிகளாக இருக் கின்றனர். கணவன், தந்தை அல்லது அண்ணன் உண்மையில் எல்லாவற்றையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே சமுகத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக பிற்படுத்தப் பட்டவர்களாக இருக்கும் பிரிவினருக்கு இடஒதுக்கீடு நீண்டகாலமாக இருக்கின்றது. அதன் விளைவு என்ன? உரிமை மறுக்கப்பட்ட, தலித்துகள் என்று அழைக்கப் படுவோரில், பிற ஒடுக்கப்பட்ட பிரிவினரில்

தொடர்ச்சி 6ம் பக்கம்

மகளிர் இடஒதுக்கீடு மசோதா . . .

# பெண்களும் ஆண்களைப்போலவே அனைத்து பொறுப்புக்களையும் சவால்களையும் ஏற்கும் திறன் பெற்றவர்கள் என கருதப்பட வேண்டும்

5ம் பக்கத் தொடர்ச்சி

பெருந்தட்டு மக்களுக்கு இடஒதுக்கீட்டால் என்ன பயன் கிடைத்தது? சுரண்டப்படும் பிறபகுதி மக்களைப்போலவே நாளுக்குநாள் அவர்கள் வாழ்க்கை நிலைமை தொடர்ந்து மோசமாகி யல்லவா வருகின்றது? கடந்த 75 ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் இதுதானே நிலைமை? தலித் மக்களும் ஒடுக்கப்படும் பிற பிரிவினரும் இந்த ஒடுக்குமுறை முதலாளித்துவ ஆட்சிதான் அனைத்து பிரச்சினைக்கும் ஆணிவேர் என்ற உண்மையை உணர்ந்துகொண்டுவிடக்கூடாது என்பதால், ஒடுக்கப்படும் அப்பிரிவினரின் மிகச் சிறிய பகுதியினரை இடஒதுக்கீடு என்ற சலுகையின்மூலம் அதிக வசதிகளை, அதிகாரத்தை கொடுத்து நயவஞ்சகமாக தன்பக்கம் ஆளும் முதலாளித்துவ வர்க்கம் இழுத்துக்கொள்கிறது. ஆக, ஒடுக்கப்படும் தலித் மக்களில் மிகச் சிறிய, சுமார் 3% மக்கள் மட்டுமே அனைத்து சந்தர்ப்பங்களையும் சலுகைகளையும் கைப்பற்றி, 'கிரீமி லேயர்' என்ற வசதிமிக்க மேல்தட்டு பிரிவினராகிவிட்டனர். இவர்களே எல்லா சலுகைகளையும் அனுபவித்துக்கொண்டு சமுதாயத்தில் செல்வாக்கு மிக்க பணக்காரர் களாகி, ஒடுக்கப்பட்ட, பின்தங்கிய பெருந்தட்டு மக்களின் மோசமாகிவரும் வாழ்க்கையைக் கண்டுகொள்ளாத, முற்றிலும் சமூக அக்கறை யற்றவர்களாக உருவாகிவிட்டனர். இந்த 'கிரீமி லேயர்' ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு தொங்கு சதையாக மாறி, ஒடுக்குமுறை முதலாளித் துவத்தின் பூட்ஸ் கால்களை நாவால் துடைக்கும் எல்லா சாமானிய பணக்காரர்களைப் போலவே எல்லாவகையான சட்ட விரோத நடவடிக்கை களிலும் ஊழலிலும் ஈடுபடுகிறார்கள்.

மகளிருக்கான இடஒதுக்கீட்டிலும் வேறு என்ன நடக்கும்? உண்மை என்னவென்றால், அவர்களின் வளர்ச்சிக்கு தடையாக இருப்பதும், அவர்கள் சந்திக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் பொருளாதார சுதந்திரம் இல்லாததும், சுதந்திரமாக தங்கள் வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டதும் ஆகும். இதை வழங்காமல் வானளாவ பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை. எனவே, ஆணாதிக்க, முதலாளித்துவ சுரண்டல் சமுதாய அமைப்பை அப்படியே வைத்துக்கொண்டு, பெண்கள் மீதான பாரபட்ச மனப்பான்மை தொடர்ந்து கொண்டு, மகளிர் இடஒதுக்கீட்டை பாராளுமன்ற சட்ட மன்றங்களில் கொடுத்துவிட்டால் பெண்களுக்கு அதிகாரம் வழங்கியதாக ஆகிவிடும் என நினைத்தால் அது பகற்கனவாகும்.

சொல்லப்போனால், தங்களின் எரியும் வாழ்க்கைப் பிரச்சினைகுறித்து விழிப்புணர்வை அதிகமாக்கிக்கொண்டுவரும் பெண்கள் தங்கள் பிரச்சினையைத் தீர்க்க சரியான செயல்திட்டமான போராட்ட இயக்கத்தை நோக்கி தங்களைத் தயார்படுத்தி வருகிறார்கள். அவர்களைத் திசைதிருப்பவே ஆளும் முதலாளித்துவ வர்க்கமும் அதன் அடிவருடி பாஜக கட்சியும் மகளிர் இடஒதுக்கீடு என்ற பசப்பு மசோதாவை பெண்கள் சமுதாயத்தின் முன்பு காட்டிக் கொண்டிருக்கிறது. இடஒதுக்கீட்டை கொண்டுவந்ததன் மூலம், உண்மையில், ஆணுக்குச் சமமாக பெண் கருதப்படவில்லை என்பதையும் அவர்கள் பலவீனமானவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்பதையும் ஆளுவோர் மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார்கள்.

பெண்களை ஆண்களுக்குச் சமமாகக் கருத வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். அவர்கள் தனது ஆண் தோழர்களைப்போலவே அனைத்து பொறுப்புக்களையும் சவால்கலையும் ஏற்கும் திறன் பெற்றவர்கள் என கருதப்பட வேண்டும். ஆணுக்கு நிகர் உரிமைகளை பெண்களுக்கு வழங்க இடஒதுக்கீடு வேண்டுமா? அல்லது இதை ஏற்றுக்கொள்வது, பெண்கள் ஆண்களைவிட பலவீனமானவர்கள் பின்தங்கிய வர்கள் என கருதப்படுகிறார்கள் என்றாகாதா? எனவே இடஒதுக்கீட்டை மார்க்சிஸ்டுகளாகிய நாங்கள் உறுதியுடன் எதிர்க்கிறோம்.

எனவே, பெண்களின் கண்ணியத்தின் மரியாதைமீதான தாக்குதலாகக் கருதி, மகளிர் இடஒதுக்கீட்டை ஆதரிப்போரின் மனப்பாங்கிற்கு எதிராக குரலெழுப்ப அனைத்து ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களும் உழைக்கும் வர்க்கத்தினரும் முன்வரவேண்டும். உண்மையில், சரியான பாதையில் விடுதலைக்காகப் போராடும் பெண்களின் போராட்டத்தைத் தடுக்கவும், ஆண் பெண் இருபாலரும் இணைந்து முதலாளித் துவத்தைத் தூக்கியெறிய நடத்தும் ஒன்றுபட்ட போராட்டத்திற்கு தடங்கலை ஏற்படுத்தி ஆண் பெண் இடையே பிளவுபடுத்தவும் தங்களின் வர்க்க நலனுக்காக ஆளும் முதலாளித்துவ வர்க்கமும் அதற்கு சேவைபுரியும் கட்சிகளும் திட்டமிட்டு இந்தக் காயை நகர்த்தியிருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும் ■

## தோழர் சங்கரய்யா அவர்களுக்கு செவ்வணக்கம்!




*இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர் என் சங்கரய்யா (102) இன்று காலமானார். தோழரது மறைவுக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி 15.11.2023 இன்று வெளியிட்டுள்ள அறிக்கை:*

தோழர் என் சங்கரய்யா மாணவர் பருவத்திலேயே சுதந்திரப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பின்பு மார்க்சியத்தின்பால் ஈர்க்கப்பட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு முதலாளித்துவ வர்க்க சுரண்டலுக்கு எதிராக தொழிலாளர் போராட்டங்களை கட்டி எழுப்பியவர்களில் ஒருவராவார். தோழர் என் சங்கரய்யாவின் மரணம் உழைக்கும் மக்கள் இயக்கத்திற்கு பெரும் இழப்பாகும். தோழர் என் சங்கரய்யாவின் மரணத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டார். தோழர் என் சங்கரய்யா அவர்களுக்கு செவ்வணக்கம்! ■

## தமிழக காவல்துறை விவசாயிகளை கைது செய்திருப்பதைக் கண்டித்து ஏஐகேகேஎம்எஸ்

*ஏஐகேகேஎம்எஸ்ன் மாநிலத் தலைவர் சந்திரபோஸ், விவசாயிகளை தமிழக காவல்துறை கைது செய்திருப்பதைக் கண்டித்து 17.11.2023 அன்று வெளியிட்ட அறிக்கை:*

திருவண்ணாமலையிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் 15க்கும் மேற்பட்ட குக்கிராமங்களையும் பசுமை படர்ந்த கிட்டத்தட்ட 3,200 ஏக்கர் விவசாய நிலங்களைக் கையகப்படுத்தி அவ்விடத்தில் 'சிப்காட்' தொழிற்பேட்டை அமைப்பதற்காக பாலியப்பட்டு, ஆடையூர், தேவனந்தல், அய்யம்பாளையம், அஸ்வநாகசுரணை உள்ளிட்ட ஏழு ஊராட்சிகளின் மொத்த நிலப்பரப்பையும் கைப்பற்ற நடவடிக்கை மேற்கொண்டிருப்பதை எதிர்த்து அப்பகுதி கிராம மக்கள் 125 நாட்களுக்கும் மேலாகப் போராடிவரும் நிலையில் தற்போது தமிழக காவல்துறை 20 போராட்டக்காரர்களை கைது செய்திருப்பதையும் அதில் 7 பேர் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதையும் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் (ஏஐகேகேஎம்எஸ்) வன்மையாகக் கண்டிக்கிறது.

விவசாய நிலங்கள் பறிபோனால் விவசாயிகளது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனும் அவர்களின் அச்சம் நியாமனானதே. தங்கள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அவர்கள் ஜனநாயக முறையில் இத்தனை நாட்களாகப் போராடிவரும் நிலையில் அவர்களை 04.11.2023 அன்று விடிகாலை சுமார் 2 மணியளவில் அத்து மீறி கைது செய்திருப்பதும் அதுவும் போராட்டத்தில் முன்னணி வகிக்கக்கூடிய 7 பேரை குண்டர் சட்டத்தில் கைது செய்திருப்பதும் மிகவும் கண்டனத்திற்குரியது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் விசாரணைக்குப் பயந்து தப்பியோடினாலொழிய, சாட்சிகளை அச்சுறுத்தினாலொழிய அல்லது ஆதாரங்களை அழிக்க நினைத்தா லொழிய எவரையும் குற்றவியல் நடைமுறை சட்டம் 41 (1) இன் கீழ் கைது செய்யக்கூடாது என உச்சநிதிமன்றம் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியிருக்கும் நிலையில் ஜனநாயக முறையில் தங்கள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க போராடும் விவசாயிகளைக் கைது செய்திருப்பது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது.

எனவே தமிழக அரசாங்கம் இதில் உடனடியாகத் தலையிட்டு கைது செய்யப்பட்ட அனைத்து விவசாயிகளையும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிக்க வேண்டும் என்றும் விவசாய விளைநிலங்களை கையகப்படுத்தி 'சிப்காட்' தொழிற் பேட்டை அமைக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும் எனவும் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் (AIKKMS) கோருகிறது ■

## ஆந்திர பிரதேச 2வது கல்வி பாதுகாப்பு மாநில மாநாடு





**ஆந்திராவில் நடைபெற்ற 2வது கல்வி பாதுகாப்பு மாநாட்டில் முன்னாள் வரலாற்று பேராசிரியர் கருணானந்தன் உரை**

அகில இந்திய கல்வி பாதுகாப்பு கமிட்டியின் ஆந்திர மாநில கமிட்டி சார்பாக 9 நவம்பர் 2023 அன்று அனந்தபூரில் இரண்டாவது ஆந்திர பிரதேச மாநில கல்வி பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. 250 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் வரலாற்று அறிஞர் பேராசிரியர் கருணானந்தன் அவர்கள் தேசிய கல்விக் கொள்கை 2020 தற்போது இருக்கக்கூடிய கல்வியை முற்றிலுமாக அழித்து ஒழித்து விட்டு கோடிக்கணக்கான அடித்தட்டு மக்களின் கல்வியை மறுப்பதற்கானது என்று கடுமையாக சாடினார்.

இன்று மத்தியில் ஆட்சியில் இருப்பவர்கள் தங்களது வல்லாதிக்கத்தை நிலை நிறுத்தும் விதமாக வரலாற்றை திருத்தி எழுதுவது குறித்து அவர் பேசுகையில் உண்மையான வரலாற்றை அழித்துவிட்டு அதற்கு பதிலாக கற்பனையான மாயவாத வரலாற்றை திணிப்பதற்கான முயற்சி நடக்கிறது என்று கூறினார்.

அகில இந்திய கல்வி பாதுகாப்பு கமிட்டியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் தருண்கந்தி நஸ்கர் கல்வியை முழுமையாக தனியார்மய மாக்குவதையும் தேசிய கல்விக் கொள்கையில் அடங்கியுள்ள மோசமான முன்மொழிவுகளையும் விமர்சித்தார்.

புகழ்பெற்ற கல்வியாளரும் குடியுரிமை களுக்கான இயக்கத்தின் தலைவருமான திரு ஏ சந்திரசேகர், புகழ்பெற்ற ஆய்வாளரும் பாட புத்தக ஆசிரியருமான திரு கொப்பார்த்தி வெங்கட ரமண மூர்த்தி, அகில இந்திய கல்வி பாதுகாப்பு கமிட்டியின் அகில இந்திய செயற்குழு உறுப்பினர் திரு வி என் ராஜசேகர் ஆகியோரும் உரையாற்றினார்கள். என்இபி 2020க்கு எதிராகவும் அதனை அமல்படுத்துவதற்கு எதிராகவும் கடுமையாகப் போராடுவோம் என்று மாநாட்டில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது ■



**புதுச்சேரி மாநிலம் நெட்டப்பாக்கம் தொகுதியில் கோழி கழிவுகளை கொட்டி சுகாதாரமற்ற சூழ்நிலை உருவாக்கும் செயல்களைக் கண்டித்தும், அடிப்படை வசதிகளான சாலை, பாதுகாப்பான குடிநீர் வழங்கிட கோரியும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் சார்பில் மாநிலச் செயலாளர் தோழர் லெனின் துரை தலைமையில் கையெழுத்து இயக்கம் ■**



**புதுச்சேரி மாநிலம் மடுகரையில் சுற்றுசூழல் சீர்கேட்டை சரிசெய்யக் கோரி மக்கள் கையெழுத்துயிட்ட கோரிக்கை மனு நெட்டப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினரிடம் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் லெனின்துரை சமர்பித்ததின் பின்னணியில் அனைத்து கோரிக்கைகளும் உடனடியாக நிறைவேற்றப்பட்டன ■**

## மக்கள் வாழ்வின் எரியும் பிரச்சினைகளை முன்வைத்து

# மாண்புமிகு ஜனாதிபதிக்கு மக்கள் மனு

*(சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சி நாடு முழுவதும் மக்கள் பிரச்சினை முன்வைத்து மாண்புமிகு ஜனாதிபதியிடம் மனு சமர்ப்பிற்பதற்கான கையெழுத்து இயக்கத்தை நடத்திக் கொண்டு வருகிறது. அதன் அறைகூவலை கீழே தருகிறோம்.)*

இந்திய மக்கள் சமீப ஆண்டுகளாக இதுவரை கண்டிராத அளவிற்கு கடும் பொருளாதாரச் சுமையால் நசுங்கிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய பாஜகவின் ஆட்சியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றம் இவ்வருட ஜூலை தரவின்படி இருமாதங்களுக்கு முன்பிருந்த 4.5%யிலிருந்து 11.5% ஆக உயர்ந்துள்ளது. அரிசி, பால் முதற்கொண்டு அனைத்திற்கும் ஜிஎஸ்டி வரி விதிக்கப் பட்டது. கேஸ் விலை 7 ஆண்டுகளில் இருமடங்காகி விட்டது. மின்சாரச் சட்டம் 2022 அமலாக்கத்தால் மின்சாரக் கட்டணம் உயர்ந்து வருகிறது. மாநில திமுக அரசாங்கம் வீட்டுவரி குடிநீர்வரி நிலப்பதிவு கட்டணம் போன்றவற்றை உயர்த்தியுள்ளது.

அதேசமயம் அரசுத்துறை, பொதுத்துறைகளில் காலியிடங்கள் நிரப்பப்படாமையால் கான்டிராக்ட் முறை புகுத்தப்பட்டு பல இலட்சம் வேலை வாய்ப்பு பறிபோய்விட்டது. இடுபொருட்களின் விலை உயர்வால் விவசாயம், கட்டிடப்பணி, சிறு குறு தொழில்கள் முடங்கிவிட்டன. 2014ல் 5.4%மாக இருந்த வேலையின்மை விகிதம் இவ்வாண்டு அக்டோபரில் 10.05%மாகவும் உயர்ந்துள்ளது. மேலும், இராணுவத்துறையிலும் தனியார்மயம் போன்ற கொள்கைகளை பாஜக நிறைவேற்றி யுள்ளது. விவசாய மண்டிகளை தனியார்மய மாக்கக் கொண்டுவந்த வேளாண் சட்டங்களை சுமார் 700 விவசாயிகள் உயிரைக் கொடுத்து போராடியதால் பாஜக அரசாங்கம் கைவிட்டாலும் விவசாயிகளின் அடிப்படை கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை.

தொழிலாளர்களுக்கு ஓரளவு உரிமைகளைக் கொடுத்துவந்த 44 சட்டங்களை நான்கு தொகுப்புகளாகக் குறைத்து பல்வேறு உரிமை களை பாஜக அரசாங்கம் பறித்தது. மக்களின் சிந்தனையை மழுப்ப நவீன அறிவியல் பாடங் களை அகற்றி புராதன இந்துத்துவா கருத்துக்களை ‘இந்திய அறிவு முறை’ என்றபெயரில் புதிய தேசிய கல்விக் கொள்கை 2020ன் மூலம் பாஜக நாடுமுழுவதும் அமுலாக்கி வருகிறது. திமுக மாநில அரசாங்கமும் இதை அமுலாக்குகிறது. இக்கொள்கை அரசுப்பள்ளி களை இழுத்துமூடி, கல்வியை வியாபாரமயமாக்கி வருகிறது.

ஒடுக்கப்படும் மக்களின் ஒற்றுமையைக் குலைக்க மதவெறியை தூண்டும் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் கடந்த பத்தாண்டுகளாக தீவிரமாக எடுத்துவருகிறது. இந்திய குடியுரிமைச்சட்டம், அயோத்திப் பிரச்சினை, மாட்டிறைச்சிப் பிரச்சினை, மணிப்பூர் கலவரம் என மதவெறியைத் தூண்டும் நடவடிக்கைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆகவே மக்களின் அடிப்படைப் பிரச்சினை களைத் தீர்க்கக் கோரியும், இந்திய ஏகபோக கார்ப்பொரேட் ஆதரவு மக்கள் விரோதச் சட்டங்களையும் திட்டங்களையும் திரும்பப்பெறக் கோரியும் மத்திய மாநில அரசாங்கங்களை வலியுறுத்த, மாண்புமிகு ஜனாதிபதிக்கு மக்கள் கையொப்பமிட்ட மனு சமர்ப்பிக்க நாடுதழுவிய இயக்கத்தை சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) துவக்கியுள்ளது. எனவே இத்துடன் இணைக்கப்பட்ட கோரிக்கை மனுவில் கையொப்பமிட்டு சமர்ப்பிக்க முன்வருமாறு மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

### கோரிக்கைகள்

- விலைவாசி ஏற்றத்தைத் தடுத்திடு. பெட்ரோல் டீசல் கேஸ் விலைகளைக் குறைத்திடு. அத்தியாவசியப் பொருட்களின் வாணிபத்தை அரசே ஏற்றுக்கொள்.
- தேசிய கல்விக் கொள்கை 2020ஐ உடனடியாகத் திரும்பப் பெறு. கல்வியை தனியார்மயம் வியாபாரமயம் காவிமயம் ஆக்காதே.
- அனைவருக்கும் நிரந்தர வேலை கொடு. அதுவரை வேலை தராதோருக்கு உதவித்தொகை (Unemployment Allowance) வழங்கு.
- அனைவருக்கும் மருத்துவச் சேவையை இலவசமாக அரசே வழங்கு. மருத்துவ சுகாதாரத் துறையை தனியார்மயமாக்காதே.
- ஏகபோக ஆதரவு மக்கள் விரோத மின்சார சட்டம் 2022ஐ திரும்பப் பெறு. ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தைக் கைவிடு.
- காடுகள் பாதுகாப்புச் சட்டம் 2020ஐ திரும்பப் பெறு, காடுகளையும் காட்டை நம்பி பிழைக்கும் மலைவாழ் மக்களின் வாழ்க்கையையும் பாதுகாக்க, காடுகள் பாதுகாப்புச் சட்டம் 2006ஐ மீண்டும் அமலாக்கு. சுற்றுச் சூழலைப் பாதுகாத்திடு. புவி வெப்பமயமாதலைக் குறைக்க நடவடிக்கை எடு.
- ஜனநாயக மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாத்திடு. அனைத்து கறுப்புச் சட்டங்களையும் நீக்கிடு.
- பெண்கள், தலித்துகள், சிறுபான்மையினர் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்து.
- தொழிலாளர் விரோத சட்டங்களை திரும்பப் பெறு. ஆலைமூடல், ஆட்குறைப்பு ஆகிவற்றை நிறுத்து. பொதுத் துறைகளையும் அரசுத் துறைகளையும் தனியார் மயமாக்காதே. நீண்டகால ஒப்பந்தப் பணியாளர்களை நிரந்தரமாக்கு. அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் தேவைக்கேற்ப ஊதியம் நிர்ணயம் செய்.
- விவசாயிகளின் அனைத்து விளைபொருட்களுக்கும் உற்பத்தி செலவைவிட 1.5 மடங்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயத்தைச் சட்டமாக்கு.
- அரசு செயல்பாடுகளிலிருந்தும் அரசியலிலிருந்தும் மதத்தை விலக்கிவைத்திடு. தனிநபரின் நம்பிக்கை யாகவும் விருப்பத் தேர்வாகவும் மதம் இருப்பதை உறுதிசெய்திடு ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication: First week of Every Month

பாட்டாளி சிந்தனை
PAATTALI CHINTANAI

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# ஐக்கிய விவசாயிகள் முன்னணியும் தொழிற்சங்கங்களும் இணைந்து நாடு முழுவதும் தொடர் பெருந்திரள் அமர்வு போராட்டம்

## மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத கொள்கைகளை எதிர்த்து நவம்பர் 26–28 நாடு முழுவதும் போராட்டம்

அகில இந்திய அளவிலே விவசாய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பும் (எஸ்கேஎம்) அனைத்து மத்திய தொழிற்சங்க கூட்டமைப்பும் இணைந்து மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத கொள்கைகளை எதிர்த்து நவம்பர் 26–28 நாடு முழுவதும் வரலாற்றுச் சிறப்புமிக்க பெருந்திரள் அமர்வு போராட்டம் நடத்தியது. சமீபத்திலே டெல்லியில் நடைபெற்ற விவசாயிகளுடைய போராட்டமானது இந்தியாவில் இருக்கின்ற அனைத்து தரப்பு மக்களும், அதேபோல் தொழிற்சங்கங்களும் விவசாய அமைப்புகளும் அவர்களுடைய கோரிக்கையை முன்வைத்து போராட ஒரு உத்வேகத்தை அளித்தது. வீரமிக்க அப்போராட்டத்தில் 740க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிர்த்தியாகம் செய்தனர். முடிவிலே மத்திய அரசாங்கம் தான் கொண்டு வந்த விவசாயி விரோத மசோதாவை திரும்ப பெற்றுக் கொண்டது.

இருப்பினும், மின்சார திருத்த மசோதாவை திரும்பப்பெறல், விவசாய பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை அளித்தல், போராட்டக்காரர்கள் மீதான வழக்குகளை திரும்பப்பெறல் போன்ற வாக்குறுதிகள் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. அதேபோன்று தொழிற்சங்கங்கள், அனைவருக்கும் வேலை வாய்ப்பு, பொதுத்துறை தனியார்மயத்தை நிறுத்துதல், தனியார்மயம் தாராளமயம் உலகமயம் கொள்கைகளை கைவிடல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து தனியாக போராடி வந்தனர். தற்போது வீரமிக்க விவசாயிகளும் போராட்ட குணமிக்க தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து மத்திய அரசாங்கத்தின் மக்கள் விரோத தொழிலாளர், விவசாய விரோத போக்குகளை கண்டித்து அனைத்து மாநிலங்களிலும் கவர்னர் மாளிகை முன்பு இந்த பெருந்திரள் முற்றுகை போராட்டத்தை நடத்தியுள்ளது.

சென்னை ராஜரத்தினம் அரங்கில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் ஏஐகேகேஎம்எஸ் மற்றும் நமது அகில இந்திய தொழிற்சங்கமான ஏஐயுடியுசி சார்பில் கோரிக்கை பதாகைகளையும் அமைப்பின் கொடிகளையும் ஏந்தி உற்சாகமாகப் பங்கேற்றனர். போராட்டத்தில் அனைத்து சங்கத் தலைவர்களும் உரையாற்றினர்.

ஏஐயுடியுசி சார்பில் உரையாற்றிய மாநிலச் செயலாளர் தோழர் வி சிவகுமார், இப்போராட்டம் மேலும் தீவிரமாக கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றார். அதே நேரத்தில் மக்களுடைய கோரிக்கைகள் பாராளுமன்றம் சட்டமன்றம் மூலமாக தீர்க்கப்படும் என்று பலரால் நம்பப்படுகிறது என்று சுட்டிக்காட்டிய அவர், பாராளுமன்றங்களும் சட்டமன்றங்களும் ஒரு மக்கள் போராட்ட களம் தான் தேர்தலும் ஒரு போராட்ட களம் தான், வெளியே நடத்தும் போராட்டங்களை சட்டமன்றம் பாராளுமன்றத்திற்கும் உள்ளேயும் எதிரொலிக்கவே மக்கள் பிரதிநிதிகள் உள்ளே செல்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். பாராளுமன்றத்தை நாம் பயன்படுத்தும் அதேவேளையில் அங்கு நடத்தும் போராட்டத்துடன் வெளியே நடத்துகின்ற போராட்டத்துடன் இணைக்கின்றோம். ஆனால், வெளியே போராட்டங்களை தீவிரப்படுத்தாமல் பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றத்தால் மட்டுமே உலகத்திலே எந்த பகுதியில் எந்த நாட்டிலும் சட்டமன்றங்களும் பாராளுமன்றமும் மக்களுடைய பிரச்சினை தீர்த்த வரலாறு கிடையாது. இந்திய நாட்டிலே நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்களாகட்டும் அல்லது சீனா, ரஷ்யா போன்ற நாட்டிலே சோசலிசத்தை நிர்மாணிப்பதற்கான நடைபெற்ற புரட்சியாகட்டும் அனைத்துமே இப்படி வெளியில் நடத்திய போராட்டம் தான்.

எனவே வெளியிலே நடக்கின்ற போராட்டத்தை பாராளுமன்றத்திற்கு உள்ளே எதிரொலிக்க செய்வதற்காக மக்கள் பிரதிநிதிகள் மக்களால் அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் மக்களுக்கு விரோதமாக விவசாயிகளுக்கு விரோதமாக மசோதாக்கள் நிறைவேற்றும் போது அதனை வெளியிலே நாம் நடத்தும் இந்த போராட்ட சக்தியுடன் இணைக்க வேண்டும். இந்த போராட்ட சக்திகள் தான் முதன்மையானது அதனை வலுப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். வரும் பாராளுமன்றத்திற்கான தேர்தலில் எந்த கட்சி அல்லது கூட்டணி நாம் இங்கு வைத்திருக்கின்ற 26 அம்ச கோரிக்கைகளை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றுகிறோம் என்று சொல்கிறார்களோ, அதேபோன்று விவசாயிகள், தொழிலாளர்கள் விரோத, தனியார்மயம், தாராளமயம், உலகமய புதிய பொருளாதார கொள்கைகளை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் திரும்ப பெறுவோம் என்று சொல்கிறார்களோ அந்தக் கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு நாம் வாக்களிக்க வேண்டும் என்றும் உறுதிபடக் கூறினார். ஏஐயுடியுசி தமிழ்நாடு துணைத்தலைவர் தோழர் எஸ் கணேசனும் கூட்டத்தில் உறையாற்றினார்.

ஏஐகேகேஎம்எஸ் சார்பில் மாநிலத் தலைவர் தோழர் சந்திரபோஸ் உரையாற்றியபோது, விவசாயிகள் கூட்டமைப்பின் கோரிக்கை அரசாங்கத்தை மட்டுமல்ல, கார்ப்பொரேட் முதலாளிகளை எதிர்த்துத்தான் என்று நினைவுபடுத்தினார். எனவே தேர்தல் மூலம் அரசாங்க மாற்றம் பிரச்சினைகளைத் தீர்க்காது, அவர்களை திரைக்குப் பின்னாலிருந்து ஆட்டுவிக்கும் இந்திய கார்ப்பொரேட் முதலாளிகளிடமிருந்து விவசாயத்தையும் நாட்டையும் காப்பாற்ற வேண்டும் என்றார்.

போராட்டத்தில் ஏஐகேகேஎம்எஸ் மற்றும் ஏஐயுடியுசி சார்பில் பல்வேறு மாவட்ட பிரதி நிதிகளும் நிர்வாகிகளும் கலந்துகொண்டனர் ■



கொல்கத்தா



பீஹார்



ஒடிசா



சென்னை ராஜரத்தினம் அரங்கில் நடைபெற்ற போராட்டத்தில் தொழிலாளர்களும் விவசாயிகளும்

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**